OS.No. 370/2018

Date : 13.02.2026

Witness Name & Rank – பழனிசாமி – PW1

**சாட்சி அழைக்கப்பட்டு 6 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

1. எனக்கு திருமணம் நடந்து 53 ஆண்டுகள் இருக்கும் என்றால் 56 ஆண்டுகள் இருக்கும். திருமணம் முடிந்து நானும் எனது மனைவி சுப்பாத்தாளும் கிடாதுரைபுதுார் கிராமத்தில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். வழக்கு சொத்து மொத்தம் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் சுமார் 10 ஏக்கர் வரும். என்ன என்ன காலையில் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் மங்கலம் 320, 321, 329 காலைகளில் 3.60 ஏக்கர் நிலம், வேலாயுதபாளையம் காலை எண். 13, 12 2.25 ஏக்கர் பூமி ஆகும். கருத்தம்பட்டியில் காலை எண். 310 1.65 ஏக்கர் பூமி ஆகும். அது போல் அதே கிராமத்தில் 323, 318, 319 காலையில் 3.25 ஏக்கர் பூமி ஆகும். மேற்படி நிலங்களில் உட்பிரிவு விவரம் தெரியுமா என்றால் அது தெரியாது. அதன் செக்குபந்தி விவரங்கள் குறிப்பிட்டு தெரியாது என்றால் சரிதான், ஆனால் கருத்தம்பட்டி 310 க்கு கிழக்கு சாலை, மேற்கு 309 காலை, தெற்கு மாரப்பகவுண்டர் மகன் சுப்பிரமணியன் பூமி, வடக்கு முத்துச்சாமி கவுண்டர் மற்றும் சின்னையக்கவுண்டர் பூமி ஆகும்.

2. மேற்படி வழக்கு சொத்து தற்போது 1 ஏக்கர் என்ன விலைக்கு போகும் என்றால் தோராயாமாக 1 கோடிக்கும் 2 கோடிக்கும் போகும். ஆதியில் வழக்கு சொத்து யாருக்கு பாத்தியம் என்றால் கருப்பக்கவுண்டர் 1929 ல் சென்னிமலைக்கவுண்டர் மற்றும் மாரப்பகவுண்டருக்கு பாகம் கொடுத்தார். அது போல் வேலாயுதபாளையம் மற்றும் மங்கலம் சொத்துக்களை சென்னிமலைக்கவுண்டர் சுயமாக வாங்கினார். சென்னிமலைக்கவுண்டருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 3 மகன்கள் மற்றும் 1 மகள் ஆவார். அவர்களது பெயர் தெரியுமா என்றால் சென்னியப்பன், சுப்பிரமணியன், அருணாச்சலம் மற்றும் எனது மனைவி சுப்பாத்தாள் ஆவார். சென்னிமலைக்கவுண்டரின் மகன்களுக்கு எப்போது திருமணம் நடந்து என்றால் அது ஞாபகம் இல்லை. எங்களது திருமணம் தான் முதலில் நடந்து என்றால் சரிதான். சென்னிமலைக்கவுண்டர் குடும்பத்திற்கு பூர்வீக சொத்துக்கள் நிறைய இருந்தது என்றால் சரிதான்.

3. மேற்படி பூர்வீக சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தை வைத்து தான் சென்னிமலைக்கவுண்டர் வழக்கு அயிட்டம் 1, 2 , 5 சொத்துக்களை வாங்கினார் என்றால் சரிதான். எனவே அயிட்டம் 1, 2, 5 ஆகிய சொத்துக்களை அனைத்தும் சென்னிமலைக்கவுண்டரின் பூர்வீக சொத்துக்கள் தான் என்றால் சரிதான். சென்னிமலைக்கவுண்டர் உயிருடன் இருந்த வரை அவரும் அவரது 3 மகன்களும் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். சென்னிமலைக்கவுண்டர் உயிருடன் இருந்த போது அவருக்கும் அவரது 3 மகன்களுக்கும் 4 ல் 1 பாகம் இருந்தது என்றால் சரியல்ல. எதனால் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனவே கூட்டுக்குடும்பமானது சென்னிமலைக்கவுண்டரும் அவரது 3 மகன்களும் தான் அவர்கள் தான் தலா 4 ல் 1 பங்காக வழக்கு சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சென்னிமலைக்கவுண்டர் அவர்களுக்கே 4 ல் 1 பங்கு தான் இருந்தது. எனவே அவர் மறைந்த பிறகு எனது மனைவியான 1ம் வாதி சுப்பாத்தாளுக்கும் அவரது தாயாருக்கும் தலா 20 ல் 1 பங்கு தான் கிடைக்கத்தக்கது என்றால்

சரியல்ல.

4. சென்னிமலைக்கவுண்டர் எப்போது காலமானார் என்றால் 1996 ல் காலமானார். எனது மாமனார் சென்னிமலைக்கவுண்டர் காலமான பிறகு 16ம் நாள் காரியத்தன்று குடும்ப பஞ்சாயத்தில் எனது மனைவிக்கு 20ல் 1 பங்கு என ஏற்கப்பட்டு மேற்படி பங்கு குறைவாக இருப்பதால் எனது மனைவி சம்மதத்துடன் குடும்ப உறவை அனுசரித்து தனது 20ல் 1 பங்கை தனது 3 சகோதரர்களுக்கும் வாய் மொழியான விடுதலை செய்து உத்தரவாதம் கொடுத்தார் என்றால் சரியல்ல. எனக்கு கிடாதுரைபுதூரில் 30 ஏக்கர் பூமி உள்ளது என்றால் சுமார் ஒரு 10 ஏக்கர் இருக்கும். எனக்கு திருமணத்தின் போது சொந்தமாக நல்ல வசதி என்பதால் எனது மாமனாரும் எனது மனைவியின் மூன்று சகோதரர்களும் எங்களது திருமணத்திற்கு 50 பவுன் தங்க நகைகள் மற்றும் சீர் வரிசைகள் செய்து நல்ல முறையில் திருமணம் செய்து வைத்தனர் என்றால் சரியல்ல. நான் நல்ல நிலையில் 30 ஏக்கர் பூமியுடன் உள்ளதால் தான் எனதுமனைவி தனக்கு பாகமாக வந்த 20 ல் 1 பங்கை தனது சகோதரர்கள் உறவு வேண்டும் என்றும் வாய்மொழியான விடுதலை செய்து உத்தரவாதம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

5. அதே போல் எனது மனைவியின் தாயார் வள்ளியம்மாள் கடந்த 15.09.1998ம் தேதி தனது 3 மகன்களுக்கு தனக்கு வந்த பாகத்தை குடும்ப பொது நிதியில் இருந்து ரூ. 5 ஆயிரத்தை பெற்று கொண்டு ஒரு பாகப்பிரிவினை பத்திரத்தை எழுதி தாவா சொத்தில் உள்ள தனது பங்கு சொத்தை விடுதலை செய்து கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எங்களுக்கு தெரியாது. நான் சொல்வது தவறு என்றும் அந்த விவரம் எனக்கும் எனது மனைவிக்கும் அப்போதே தெரியும் என்றால் சரியல்ல. எனது மனைவியின் தாயாரும் குடும்ப உறவை அனுசரித்து தனக்கு வயதானதால் பொது நிதியில் இருந்து பணத்தை பெற்றுக்கொண்டு தனது மகன்களுக்கு சொத்தை பிரித்து கொடுத்தார் என்றால் சரியல்ல. வாய்மொழியான விடுதலைக்கு பிறகு எனது மனைவிக்கு வழக்கு சொத்தில் யாதொரு பங்கும் உரிமையும் பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. அது போல எனது மனைவியின் தாயாருக்கும் 15.09.1998 க்கு பிறகு வழக்கு சொத்தில் யாதொரு பங்கும் உரிமையும் பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. எப்போது எனது மனைவி பங்கு பிரித்துதர சொல்லி கேட்டார் என்றால் சென்னிமலைக்கவுண்டர் மறைந்த போதே கேட்டோம். ஆனால் சென்னிமலைக்கவுண்டர் மகன்கள் பிரித்து தர முடியாது என சொல்லிவிட்டார்கள் என்றால் சரிதான்.

6. சென்னிமலைக்கவுண்டர் மகன்கள் எங்களுக்கு பங்கு தர முடியாது என சொல்லி எங்கள் உரிமையை மறுத்து ஊர் அறிய என் மனைவி என் அறிய இன்றைய தினம் வரை சுவாதீனத்தில் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, நாங்களும் அனுபவித்து வருகிறோம். சென்னிமலைக்கவுண்டர் மறைந்த 18 ஆண்டுகள் கழித்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது ஞாபகம் இல்லை. எனது மனைவியை வழக்கு சொத்தில் இருந்து வெளியேற்றி (Ouster) அவரது சகோதரர்கள் எனது மனைவியின் உரிமையை மறுத்து நீண்ட காலமாக அனுபவித்து வருவதால் எங்கள் பங்கை பொறுத்து தாவா சொத்தை பொறுத்து எதிரிடை அனுபவ பாத்தியம் பிரதிவாதிகளுக்கு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல, நாங்களும் அனுபவித்து வருகிறோம். நீண்ட நெடுங்காலமாக 1, 2 பிரதிவாதிகளும் அவர்களது மறைவிற்கு பிறகுஅவரது வாரிசுகளும் வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எதிரிடையாக அனுபவித்து வருவதால்

எதிரிடை அனுபவ பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல. எனவே எனது மனைவியோ அவரது மறைவிற்கு பிறகு நானோ அதில் எந்த உரிமையும் கோர முடியாது எனவே எனது வழக்கானது செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனது மாமியார் பங்கு கேட்டு வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. எனவே தான் எனது மாமியார் 3 மகன்களும் 15.09.1998 ம் தேதி பாகப்பிரிவினை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த விவரம் எனக்கு 1998 ல் தெரியும் என்றால் சரியல்ல, இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தான் தெரியும். அதன் பிறகு சென்னிமலைக்கவுண்டர் 3 மகன்களும் ஒரு சுப்பிரமணியமும் சேர்ந்து அயிட்டம் நெம்பர் 3 பொறுத்து 08.02.2010 ம் தேதி பாகப்பிரிவினை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதில் சுப்பிரமணியத்திற்கு A அட்டவனை சொத்தாக 1.65 1/2 ஏக்கர் பூமி ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சென்னிமலைக்கவுண்டரின் மூன்று மகன்களுக்கும் கூட்டாக 1. 65 1/2 ஏக்கர் பூமி ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை பெற்று அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, நாங்களும் கூட்டாக அனுபவித்து வருகிறோம். சென்னிமலைக்கவுண்டர் மறைந்த பிறகு குடும்ப ஏற்பாட்டின் படி எனது மனைவியின் பங்கை பெற்று அவரது 3 சகோதரர்களும் வருவாய் துறை ஆவணங்களில் தங்களது பெயருக்கு மாற்றி உரிய வரி விதிப்பு செலுத்தி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

8. சென்னிமலைக்கவுண்டர் மறைவிற்கு பிறகு குடும்ப ஏற்பாட்டின் படி அவரது மூன்று மகன்களுக்கு தான் தாவா சொத்துக்கள் முழுவதும் பாத்தியப்பட்டு அவர்களது தனிப்பட்ட அனுபவத்தில் இருந்து வந்தது என்றால் சரியல்ல. 08.02.2010 பாகப்பிரிவினை பிறகு சென்னிமலைக்கவுண்டர் 3 மகன்களும் 15.02.2010 ம் தேதி பாகப்பிரிவினை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த 1.65 ஏக்கர் நிலத்தை மூன்று மகன்களும் தலா 55 செண்டாக பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். அதே போல் காலை எண். 310/4 ல் உள்ள 85.5 செண்ட் நிலத்தை 1 மற்றும் 2 பிரதிவாதிகளும் அவர்களது மகன் மற்றும் மகள்களும் சேர்ந்து 07.07.2011 ம் தேதி 1ம் பிரதிவாதியின் மகனான சுப்பிரமணியம் 7ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதே தேதியில் அருணாச்சலம் அவரது மகள்கான 4 மற்றும் 5 பிரதிவாதிகள் 82.5 செண்ட் நிலத்தை வேல்ராஜ் என்பவருக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதே போல 27.12.2011 ம் தேதி 2ம் பிரதிவாதி சுப்பிரமணியம் அவரது மனைவிக்கு 1.02 ஏக்கர் பொறுத்து செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதே போல் 1ம் பிரதிவாதி சென்னியப்பக்கவுண்டர் அவரது மகன் 7ம் பிரதிவாதி சுப்பிரமணியத்திற்கு 1.02 ஏக்கர் பொறுத்து செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

9. அந்த பத்திரத்திங்களின் அடிப்படையில் அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் நாங்களும் அனுபவித்து வருகிறோம். நான் சரியான சொத்து பத்திரங்களை தாக்கல் செய்யவில்லை அதே போல் மேற்சொன்ன பிரதிவாதிகள் செய்த பத்திரங்களின் அடிப்படையில் தான் சொத்து விவரங்கள் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் எனவே நான் துூய கரங்களுடன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 6 முதல் வா.சா.ஆ. 10 அசல் ஆவணங்கள் 1, 2 பிரதிவாதிகளிடம் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளால் ஏற்படுத்தப்பட்ட 15.09.1998, 08.02.2010, 15.12.2010 பாகப்பிரிவினை பத்திரங்கள் அது போல 07.07.2011 ல் எழுதப்பட்ட 2 கிரைய பத்திரங்கள் 27.12.2011 ல்

எழுதப்பட்ட 2 செட்டில்மெண்ட் பத்திரங்கள் சட்டப்படியான நிலை தன்மை உள்ள மற்றும் உண்மையான நடைமுறைக்கு வந்த எங்களை கட்டுப்படுத்தக்கூடிய பத்திரங்கள் என்றால் சரியல்ல. மேற்படி பத்திரங்கள் செல்லாது என உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தி விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானோ எனது மனைவியோ மற்ற வாதிகளோ எந்த காலத்திலும் கூட்டு சுவாதீனத்தில் சென்னிமலைக்கவுண்டர் இருந்த போதும் இறந்த பிறகும் இருந்ததில்லை என்றால் சரியல்ல. அருணாச்சலக்கவுண்டர் எழுதியதாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ 16 செட்டில்மெண்ட் ஆவணத்தில் அவரது மகள்கள் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான்.

10. வா.சா.ஆ. 16 அருணாச்சலக்கவுண்டரால் 1ம் வாதிக்கு எழுதிக்கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு சொத்துக்கள் பூமி நிலங்கள் என்பதால் பெண் வாரிசுக்கு செட்டில்மெண்ட் எழுதித்தர அருணாச்சல கவுண்டருக்கு தகுதி இல்லை என்றால் சரியல்ல. எனவே வா.சா.ஆ. 16 செல்லத்தக்கதல்ல அது நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. அந்த வா.சா.ஆ 16 செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி எந்த உரிமையும் எனது மனைவிக்கும் எங்களுக்கும் வரவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்கு முன்பு பாகம் கேட்டதாக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. எனது மனைவியின் சட்ட அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் கோவிலுக்கு சென்றதால் பதில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனவே சட்ட அறிவிப்பு சங்கதி உண்மையானது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு காலவரை சட்டத்தினால் உள்ளாகியுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த போது எவ்வளவு விலை இருக்கும் என்றால் சுமார் தோராயாமாக எனக்கு தெரிந்து 1 கோடி இருக்கும். எனவே இந்த வழக்கு சரியான மதிப்பீடு செய்யவில்லை என்றால் சரியல்ல, எனக்கு தெரிந்தை நான் சொல்கிறேன். எனவே நான் கூட்டு சுவாதீனத்தில் இல்லை, பிரதிவாதிகள் தான் முழு வழக்கு சொத்தில் பத்திரங்கள் படி உரிமையுடன் முழு உரிமையாளர்களாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/−)K.Yuvaraj,B.A.,B.L.,

சார்பு நீதிபதி, பல்லடம்.

---